# கிறிஸ்துவின் செயல் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றெடுக்கிறது (தீத்து 1)

> *"நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படிக்கும் ... பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே" (தீத்து 1:5).*

பொய்யுரைக்க முடியாத தேவனால் காலம் தொடங்குவதற்கு முன்பாகவே நித்திய ஜீவன் வாக்களிக்கப்பட்டது. பொய்யர்கள் என்றும் பெரு வயிற்றுச் சோம்பேறிகள் என்றும் அறியப்பட்டிருந்து, அந்தக் கணத்துக்காக மட்டும்/அந்த வேளைக்காக மட்டும் பெருமளவில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தத்தின் தனிச் சிறப்புதான் எப்படியுள்ளது *(1:12)!* பவுல் தீத்துவுக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் அவர், கிறிஸ்தவர்களாய் ஆகியிருந்த கிரேத்தர்கள் உலகப் பிரகாரமானவைகளுக்கு அப்பால் கண்ணோக்கி, நித்தியத்தின்மேல் தங்கள் நம்பிக்கையைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற தமது விருப்பத்தை விளக்கியுரைத்தார் *(1:2; 3:7)*.

பவுல் தமது நிருபத்தை, கிறிஸ்துவினிமித்தமான செயல்பாடுகளின் கவனம் செலுத்துதலிலும் தீத்து எவ்விதம் கிரேத்தர்களை மீட்பின் பக்குவத்தை நோக்கி இயக்க முடியும் என்பதிலும் தொடங்கினார் *(1:1-4)*. அவர் கண்காணிகளுக்கான தகுதிகள் மற்றும் தேவை குறித்து விவரிக்கையில் *(1:5-16)*, சபையில் தொடர்ந்த வழிகாட்டுதலுக்கான அவசியம் பற்றிக் கவனம் கொடுத்தார். கிரேத்தர்கள் தங்கள் கலகம் விளைவிக்கும் வாழ்விலிருந்து மீட்கப்பட முடியும், தக்க வழிகாட்டுதலுடன் அவர்கள் உண்மை நிறைந்த தேவபக்தியுள்ள வாழ்வை நடத்த முடியும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார்.

## பாடம் 1: கிறிஸ்துவின் செயலும் மீட்பும் (1:1-4)

பவுல் விசுவாசத்தில் தமது "உத்தம குமாரனுக்கு" (இந்நிருபத்தை) எழுதுகையில், கிறிஸ்துவில் மீட்பின் சாதகநிலை மற்றும் சாத்தியக் கூறு ஆகியவற்றை உடனடியாக முன் வைத்தார்.

### மீட்பின் வழி (வ. 1)

பொருளாதாயக் கொள்கையிலிருந்து தேவபக்தியுள்ள சிந்தனைக்குக் கடந்து செல்வதற்கான வழியானது வசனம் 3ல் பட விளக்கம் போல் தரப்பட்டுள்ளது: "தேவ பக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு."

பவுல் தம்மை "அப்போஸ்தலர்"[1] என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் முன்பு, தாம் தேவனுடைய "ஊழியக்காரராய்" இருந்ததாகக் கூறினார். ஒருவர் நல்ல ஊழியக்காரராய் இருக்க மனவிருப்பம் கொண்டிராத வரையில், அவர் இயேசுவுக்கு ஒரு நல்ல செய்தியாளராய் இருக்க முடியாது.

அடுத்து பவுல் தேவனுடைய தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் (அதாவது) "தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்பவர்களின் விசுவாசத்தைப் பற்றிப் பேசினார். இது இரட்சிக்கப்படும்படிக்கு குறிப்பிட்ட மக்களை தேவன் முன் குறித்து (தெரிந்து கொண்டு), பிறரை ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டவர்களாய் இருக்கும்படி இரக்கமற்ற வகையில் முன் குறித்தார் என்ற கால்வினீய உபதேசமாய் இருப்பதில்லை. தேவன் மக்களை மீட்க ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார், மற்றும் மீட்புக்கான அவருடைய திட்டத்தை யார் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை அவர் முன்னறிந்தார். தம்மை மதிப்பவர்கள் மற்றும் நீதியைச் செய்விப்பவர்கள் என்று அவர் அறிந்திருந்த மக்கள் "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" அல்லது இரட்சிக்கப்படும்படி அவர் முன் குறித்தவர்கள் ஆவார்கள்.

ஒருவர் தேவபக்தியுள்ளவராவதற்கு வசனத்தின் மீது "விசுவாசமும்" வசனத்தைப் பற்றிய "அறிவும்" தேவைப்படுகின்றன. "இயேசுவை விசுவாசிக்க" முயற்சி செய்து, ஆனால் வசனத்தை அறியாத மக்கள், அஸ்திபாரம் இல்லாமல் ஒரு வீட்டைக் கட்டும் மக்களுக்கு ஒப்பாய் இருக்கின்றார்கள். இதற்கு மறுபுறம், வசனத்தை அறிந்திருந்தும், கிறிஸ்துவின் திட்டம் மற்றும் கொள்கைகளில் விசுவாசத்தைக் கட்டி எழுப்புவதற்காக (தங்கள்) சொந்த (வாழ்வில்) நடைமுறைப் பயன்பாடுகளை மேற்கொள்ளாதவர்கள் குழப்பம் மற்றும் சண்டை ஆகியவற்றிற்கு ஆதார மூலமாகின்றனர்.

"தேவபக்தியை"[2] அடைதல் என்பதே சீஷர்களுக்கு மீட்பின் இலக்காக உள்ளது. கிரேத்தர்களின் பொறுப்பற்ற சோம்பேறித்தனத்தின் சூழலுக்கு நேர்மாறான வகையில் மக்களை தேவனுடன் ஒரு திடமான அடி(ச்சுவட்டில்)யில் வைப்பதென்பதே பவுலின் இலக்காய் இருந்தது.

குறுகிய நோக்கு கொண்ட வாழ்வு முறைக்குப் பதில் அதனிடத்தில் பவுல் சத்தியம், விசுவாசம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை வைத்தார் (1:11-13).

## மீட்பின் விளைவு (வ. 2அ)

தேவபக்தியானது நமது கண்ணோக்குகளை எப்பொழுதும் பரலோகத்திற்கு உயர்த்தி "நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை[3]யில்" நம்மை விட்டு வைக்கும் (1:2அ). கிறிஸ்துவுடன் உயிர்ப்பிக்கப்பட்டுள்ள/எழுப்பப்பட்டுள்ள (ரோமர் 6:3, 4; கொலோ. 3:1, 2) நிலையானது ஒருவர் தம் சிந்தையை பூமிக்குரிய விஷயங்களின்மேல் வைப்பதற்கு மாறாக மேலானவற்றின்மேல் (தம் சிந்தையை) வைக்கும்படி வழிநடத்த வேண்டும். பொருளாதாயக் கொள்கைக்கு என்ன ஒரு முறிவு மருந்து!

## மீட்பின் நம்பகத் தன்மை (வ. 2ஆ)

பவுல் முன்னிறுத்தியது ஒரு திடமான தளத்தின் மீது அமர்ந்துள்ளது, ஏனெனில் இது "பொய்யுரையாத" (1:3) யெகோவா தேவனிடமிருந்து வந்துள்ளது. எபிரெயர் 6:18, "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படிக்கு அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்" என்று கூறுகிறது. இது "பொய்யர்கள்" (1:12) என்று பெயரிடப்பட்டிருந்த முத்திரையிடப்பட்டிருந்த கிரேத்தர்களுக்கு ஒரு கூர்மையான நேர்மாறாக/முரண்பாடாக இருந்தது. மீட்பு என்பது "உலகத் தோற்றத்திற்கு முன்பாக" (எபே. 1:4-6) இருந்தே தேவனுடைய மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதாயிருந்த தேவனுடைய திட்டமும் வாக்குத்தத்தமுமாய் நிலைபெற்று நின்றுள்ளது (யோவா. 17:6, 9, 24ஐக் காணவும்).

## மீட்பு வெளிப்படுத்தப்பட்டது (வ. 3)

தேவன் தேர்ந்தெடுத்த வேளையில், தேவனுடைய திட்டமானது அவருடைய குமாரனால் "அறிவித்தலில்" கொண்டு வரப்பட்டு அறியப் படுத்தப்பட்டது (1:3; கலா. 4:4, 5; யோவா. 6:44-68; 17:6-21; எபே. 3:3-5; எபி. 1:1-5). அது வெளிப்படுத்தப்பட்டதும் மட்டுமின்றி கிறிஸ்துவுக்குள் தெளிவாக்கவும்பட்டது.[4] வேத வசனங்களில் எழுதப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையில், இப்பொழுது நாம், இதற்கு முன் தூதர்கள் கூட காண்பதற்கு அனுமதிக்கப்படாத மகிமையுள்ள ஒரு சுவிசேஷத்தை வாசிக்க முடியும் (1 பேது. 1:10-12; 1 தீமோ. 1:11). நித்திய தேவன் அவருடைய உன்னதமும் பரிசுத்தமுமான இடத்திலிருந்து "... பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிற தற்கும்" (ஏசா. 57:15) கீழே இறங்கி வந்தடைந்தார்.

இந்த மீட்பானது பவுலின் மூலமாக அறிவிக்கப்பட்டது. இவ்வழி முறையில் நாம் தெய்வீக "கட்டளையை"[5] பெற்றோம். பவுல் பயன்படுத்திய

சொற்றொடர், இது ஒரு பணி ஒப்புவிப்பாக இருந்தது என்பதில் அவருக்கிருந்த ஆர்மிக்க அறிவைச் சுட்டிக் காண்பிக்கிறது. தேவனுடைய செய்தியைக் கொடுப்பதற்கு வெளியில் அடியெடுத்து வைத்து, அந்தச் செய்தியை உண்மையுடன் கையாள வேண்டும் என்று தங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டளையைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் அதைச் செய்பவர்களுக்கு ஐயோ (2 தீமோ. 2:15; 1 பேது. 4:11).

தேவன் கட்டளைகளைக் கொடுத்துள்ளார் என்ற உண்மையானது "பிரமாணங்கள் இல்லை" என்ற எந்தக் கோட்பாட்டையும் நீக்கிப் போடுகின்றது! வாழ்க்கைக் கடலில் திசை காட்டும் கருவி எதுவும் இன்றி தத்தளிக்கும்படி நாம் விடப்பட்டிருப்பதில்லை. எது சரியானது, எது தவறானது என்பதை நாம் அறிய முடியும். தேவனுடைய நீதி வெளிப் படுத்தப்பட்டுள்ளது, அநீதியைப் பொறுத்தமட்டில் தேவனுடைய கோபமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் சாக்குப் போக்குகள் எதுவுமற்றவர்களாய் இருக்கிறோம் (ரோமர் 1:16-20). இந்தக் கட்டளை களில் பலவற்றை நமக்குத் தரும்படி பவுல் தேவனால் தேர்ந்து கொள்ளப் பட்டிருந்தார், அவற்றை நாம் புரிந்து கொள்ள முடியும் (எபே. 3:3-5).

## மீட்பைப் பெறுகின்றவர் (வ. 4அ)

பவுல் தீத்துவை ஒரு மும்மடங்கான வழியில் பாராட்டினார். (1) அவர் நித்திய ஜீவனின் நம்பிக்கையை எல்லா மக்களுடனும் பகிர்ந்து கொள்ளத் தொடர்ந்து நடக்கிற மகிமையுள்ள ஊழியத்தில் பங்கேற்பாளராய் இருக்கும்படி சிலாக்கியம் பெற்றிருந்தார். (2) பவுலினால் தீத்து, "என் உத்தம குமாரன்"[6] என்று விவரிக்கப்பட்டார் (1:1). தீத்து தனது கீழ்ப்படிதலைப் போலியானதாக்கவில்லை; அவர் தேவனுடைய உண்மைப் பிள்ளையாய் இருந்தார் (யோவா. 3:3-5; 1 கொரி. 12:13; கலா. 3:26, 27; மாற். 16:15, 16). (3) தீத்து "பொதுவான விசுவாசத்தில்" இருந்தார் (இது "பொதுவான விசுவாசத்தின்படி" என்று அர்த்தப்பட முடியும்). பவுலும் தீத்துவும் தேவனு டன் உடன் ஊழியர்களாய் இருந்தனர் (1 கொரி. 3:9). அவர்கள் அந்த விசுவாசத்தின் ஆர்வத்தில் ஊழியமும் செய்திருந்தனர். இந்த மீட்பு பெறப்படும் பொழுது, பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்!

## மீட்பின் பலன்கள் (வ. 4ஆ)

"பிதா" என்ற வகையில் தேவனும், "இரட்சகர்" என்ற வகையில் இயேசு வும், நம்மாலே நாம் ஒருக்காலும் அடைய முடிந்திராத தெய்வீக சுதந்தரம்/ வாரிசுரிமை மற்றும் பாவங்களிலிருந்து மன்னிப்பு என்ற இரட்டை பயன்கள் அறிவிக்கின்றனர். மீட்புடன் மாபெரும் பலன்கள் வருகின்றன. "கிருபை"[7] என்பது அவற்றில் ஒன்றாக உள்ளது. கிருபை என்பது "சமாதானத்திற்கு"[8] தேவனுடைய படிக் கல்லாக உள்ளது (1:2ஆ).

தீத்துவுக்கு எழுதின நிருபத்தின் இந்த அறிமுகத்தில் பவுல் கொடுத்த படி, மீட்பின் ஆசீர்வாதங்கள் வேத வாக்கியங்களின் ஏவுதலை எதிரொலிக்கின்றன.

## பாடம் 2: கிறிஸ்துவின் செயலும் கண்காணிகளும் (1:5-16)

பவுல், கிரேத்தாத் தீவின் ஒவ்வொரு சபைக்குழுமத்திலும் தகுதி வாய்ந்த மூப்பர்கள் இருக்க வேண்டுமென்று விரும்பினார். சபை இவ்வாறு வளர வேண்டுமென்றே தேவன் வடிவமைத்தார். கிறிஸ்துவின் செயல்பாட்டை கீழாக்க வேண்டும் என்ற பிசாசின் முயற்சிகளின் காரணத்தினால், சபைக்கு நிலைப்புத் தன்மையும் பலமும் வாய்ந்த மனிதர்கள் தேவைப்படுகின்றனர் (1 கொரி. 16:13; எபே. 4:11-16; 6:10-18). அந்த உண்மையை வசனம் 10 மற்றும் 11 ஆகியவை மறு உறுதிப் படுத்துகின்றன.

### கண்காணிகளைக் குறித்து பணி ஒப்படைப்பு (வ. 5)

சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளை உண்டாக்குதல், அல்லது சபைகளை நிலைநாட்டுதல் ஆகியவற்றுடன் ஒரு சுவிசேஷ ஊழியரின் ஊழியம் நிறைவடையப் பட்டிருப்பதில்லை. ஒவ்வொரு சபையிலும் தகுதி வாய்ந்த மூப்பர்கள் நியமிக்கப்படுமளவுக்கு இந்தப் படிநிலைகள் உறுப்பினர்கள் மத்தியில் வளர்ச்சி/பக்குவம் விளைவிக்கும் பொழுதுதான் ஒப்புவிக்கப்பட்ட ஊழியம் நிறைவடைகின்றது (1:5). பிள்ளைகள் தேவனுடைய நோக்கங்களில் தக்க வகையில் பக்குவமடைவதற்காக தேவனால் தரப்பட்ட ஏற்பட்டின் பாகமாகப் பெற்றோர்கள் இருப்பது போலவே, தகுதி வாய்ந்த மூப்பர்கள் தேவனுடைய குடும்பத்தில் பக்குவம் வாய்ந்த நடத்துனர்களாயிருந்து கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருப்பவர்கள் தெய்வீக இயல்பை மேம்படுத்துகையில் பாதுகாக்கப்பட்ட, ஞானமுள்ள, நன்கு ஒருங்கமைக்கப்பட்ட வளர்ச்சிக்கான சூழ்நிலையை பெறும்படி உறுதிப்படுத்தக் கூடியவர்களாய் உள்ளனர் (அப். 20:28; 1 பேது. 5:1-8; 1 தெச. 5:11-18; எபி. 13:7, 15-17).[9]

பவுல் தமது பணி ஒப்படைப்பின் தனிச் சிறப்பை உணர்ந்தறிந்தவராய், இதை ஒரு முன்னுரிமையாக முன்னிறுத்தினார். "இந்தக் காரணத்திற்காகவே"[10] பவுல் தீத்துவை கிரேத்தாவில் விட்டு வந்தார். தயவு காட்டுதல் அல்லது சந்தோஷம் கொடுத்தல் என்பதே இந்த வார்த்தையின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. இங்கு தரப்பட்ட பணி ஒப்படைப்பானது, திறன் உள்ள சுவிசேஷ ஊழியர் மூலமாக வேதாகம ரீதியான உருவாகுதலிலும் சத்தியத்தினால் உருக்கொடுத்தலிலும் தன்னைத் தானே வழி நடத்தும் சபைக்கு நற்கனி அளிக்கின்றது.

"குறைவாயிருக்கிறவைகளை[11] நிறைவாக்கும்படிக்கு"[12] பவுல் தீத்துவை அழைத்தார். அங்குமிங்கும் சற்றே திருத்தம் செய்து, அல்லது அங்கும் இங்கும் சற்றே ஒழுங்கமைத்து அழகு கூட்டப்படுகின்ற நன்கு பணிபுரியும் ஒரு மோட்டார் வாகனத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள். இந்தக்

கருத்துக்களை வனப்பும் திறமையும் அளிப்பதற்காக சபையின் குறைபாடு பற்றிய விஷயங்களுக்கு/விவரங்களுக்கு நடைமுறைப்படுத்திப் பாருங்கள். இந்த விவரங்களை முறைப்படுத்தி அமைத்தல் என்பது சுவிசேஷ ஊழியரின் ஊழியத்தில் இன்றியமையாத ஒரு பாகமாய் உள்ளது.

பிராந்திய சபை ஒவ்வொன்றிலும் விவரத்தைக் கவனித்தல் என்பது முக்கியமான தேவையாக உள்ளது. ஒரு பிராந்திய சபையானது சபை வளர்ச்சி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது, அது தங்கள் முயற்சி மற்றும் நிதிகள் ஆகியவற்றில் 80 சதவிகிதம் தங்களின் கனியில் 20 சதவிகிதத்தை உண்டாக்கும் ஊழியப் பகுதிகளுக்குச் செலவிடப்பட்டிருக்க, அவர்களின் கனியில் 80 சதவிகிதம் அவர்கள் 20 சதவிகித முயற்சியிலிருந்து வந்திருந்ததைக் கண்டறிந்தது. அவர்கள் அதிகம் செயல் திறனை ஆதாயமடைவதற்காக தங்கள் ஊழியச் செயல்முறைகள் சிலவற்றை ஒழுங்கு படுத்துவது அவசியமாயிற்று என்பது தெளிவு. எந்த ஒரு பிராந்திய சபையும் அதிகபட்சம் செயல்திறனுடன் இயங்குவதற்கு நம்பிக்கை கொள்வதற்கு முன்பு, தகவல் சேகரிக்க வேண்டும்.

1. பிராந்திய சபையில் உள்ளவர்களின் வயது வகைகள்/குழுக்களை அறியுங்கள். பெரும்பாலான உறுப்பினர்கள் அறுபது ஆண்டுகள் வயதோ அல்லது அதற்கு மேற்பட்ட வயதோ உடையவர்களாய் இருக்கின்றார்களா? பெரும்பாலானவர்கள் இருபதுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்களாய் இருக்கின்றார்களா?

2. உறுப்பினர்கள் பெற்றுள்ள குறிப்பிட்ட பயிற்சி என்ன, அவர்கள் பெற விரும்புகின்ற குறிப்பிட்ட பயிற்சி என்ன என்பவற்றை அறியுங்கள். அவர்கள் மூப்பர்களாயிருக்கும்படி, உதவிக்காரர்களாயிருக்கும்படி, அல்லது வேதாகம வகுப்பின் போதகர்களாயிருக்கும்படி பயிற்சி பெற விரும்புகின்றார்களா?

3. உறுப்பினர்களின் வீட்டு நிலைமையை அறியுங்கள். எத்தனை துணைவர்கள் உறுப்பினராய் இல்லாமல் உள்ளனர்? அவர்களின் பிள்ளைகளில் இளம் வயதினர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்துள்ளார்களா? எத்தனை பேர் விவாக ரத்து பெற்றுள்ளார்கள்? எத்தனை குடும்பத்தார் விசுவாசம் நிறைந்தவர்களாகவும் பணி செய்கின்றவர்களாகவும் உள்ளனர்?

4. உறுப்பினர்கள் vs. ஆஜராகிறவர்கள் என்ற வகையில் வரும் விகிதத்தை அறியுங்கள்; வேதாகம வகுப்புக்கு வருகிறவர்கள் (ஞாயிறு காலை) vs. பொதுவான கூடுகை; ஞாயிறு காலை ஆராதனை vs. ஞாயிறு மாலை மற்றும் இடை நாள் ஊழியம்.

5. ஆராதனை பற்றி உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டுள்ள பயிற்சியைப் பற்றி அறியுங்கள். ஆராதனையின் வெளிப்படையான செயல்பாடுகளில் எத்தனை பேர் பங்கேற்கின்றார்கள்?

6. உறுப்பினர்களின் காணிக்கையளிக்கும் மாதிரியைப் பற்றி அறியுங்கள் (அப். 2:42-47; 4:32-5:11; 1 கொரி. 16:1, 2; 2 கொரி. 8; 9).

7. பணம் மற்றும் ஈடுபாடு கொண்டுள்ள உறுப்பினர்கள் என்ற வகையில் உள்ளூர் அளவிலும் வெளிநாடுகளிலும் சபையின் வெளிச் சென்றடையும் முயற்சிகளைப் பற்றி அறியுங்கள்.

குறைந்தபட்சம் இந்த அடிப்படைக் காரணிகளையாவது அறியாத வரையிலும், ஒரு பிராந்திய சபை, தான் எவ்வாறு வளர்ந்துள்ளது, அது எங்கு வளர்வது அவசியமாய் உள்ளது, அல்லது எங்கு அது "நிறைவடைய வேண்டியுள்ள"வற்றைத் தொடங்குவது அவசியப்படுகின்றது என்பவற்றை அறிய முடியாது.

தீத்து ஒவ்வொரு நகரிலும் "மூப்பர்களை நியமிக்க"[13] வேண்டும் என்று பவுல் விரும்பினார். "நியமித்தல்"[14] என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இவ்வார்த்தையில் *தயாரிப்பு* என்பதற்குத் தரப்பட்ட அளவிலான வலியுறுத்தமானது *பணிக்கமர்த்துதல்* என்பதற்குத் தரப்படவில்லை என்றே காணப்படுகின்றது. இந்த மனிதர்கள் செயலிலும் எண்ணப்போக்கிலும் மூப்பர்கள் செய்யும்படி அழைக்கப்படும் ஊழியத்தைச் செய்ய தயாராய் இருக்கின்றார்களா என்று காண்பதே சுவிசேஷ ஊழியரின் இன்றியமையாத கடமையாய் உள்ளது.[15]

பிராந்திய சபை ஒன்றின் எதிர்காலத்தைப் பிரதானமான வழியில் திட்டவட்டமாய்ப் பாதிக்கக் கூடிய முடிவுகளும் செயல்பாடுகளும் மென்மையான ஆலோசனைகளை விட அதிகமானவற்றை (செயல்படுத்தும்படி) அழைக்கின்றன. இந்தப் பணிப் பொறுப்பைப் பவுல் தீத்துவுக்குக் கொடுத்த பொழுது, இது "ஆணையிடப்பட்டதாக"[16] இருந்தது. இது தீத்துவுக்கோ அல்லது பிராந்திய சபையின் வாழ்வில் தேவைகளையோ அல்லது ஒழுங்கீனங்களையோ காண்கின்ற எந்த ஒரு சுவிசேஷ ஊழியருக்கோ தேர்ந்து கொள்ளுதல் என்பதாய் இல்லாதிருந்தது. கால அட்டவணை எதுவும் அளிக்கப்படவில்லை, ஏனென்றால், பிராந்திய சபைகளின் தேவைகள் மாறுபடும். இருப்பினும், ஒரு சுவிசேஷ ஊழியர் பணிப்பொறுப்பானது செய்து முடிக்கப்படும் வரையிலும் தகுதி வாய்ந்த இந்த இலக்கை கண்ணோக்கத்தில் காத்திருக்கின்றார்!

## கண்காணிகளுக்கான தகுதிகள் (வ. 6-9)[17]

அடுத்ததாகப் பவுல், மூப்பருக்கான தகுதிகளின் பட்டியல் ஒன்றைக் கொடுத்தார். "குற்றம் சாட்டப்படாதவராயிருக்க வேண்டும்"[18] என்ற வார்த்தைகள் எவ்வாறு இந்தப் பட்டியலின் தொடக்கத்தில் (மற்றும் மீண்டும் வசனம் 7ல்) உள்ளன என்பதைக் கவனியுங்கள். இந்தப் பண்பானது மூப்பரின் வாழ்வில் காணப்பட வேண்டிய மற்ற ஒவ்வொரு பண்பு நலனையும் எடுத்துரைப்பதாகவும் தகுதிப்படுத்துவதாகவும் இருப்பதால் இவ்விதமாய் (குறித்து) வைக்கப்பட்டுள்ளது (1:6-9).

"குற்றஞ் சாட்டப்படாதவர்"

I. ஒரு குடும்பஸ்தர் என்ற வகையில்
   1. ஒரே மனைவியை உடைய கணவராய் இருக்க வேண்டும் (Gk.: *mias gunaikos aner*), ஒரு பெண்ணைக் கொண்ட மனிதர்.
   2. அடங்காதவரென்றோ துன்மார்க்கரென்றோ பெயரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளைப் பெற்றவர்கள்.

II. சொந்த வாழ்வின் வகையில்

*எதிர்மறை --*

*3. தன்னிஷ்டப்படி செய்யாதவர்*
*4. முற்கோபமில்லாதவர்*
*5. மதுபானப் பிரியமற்றவர்*
*6. அடியாதவர்*
*7. இழிவான ஆதாயத்தை இச்சியாதவர்*

*நேர்மறை --*

*8. அந்நியரை உபசரிக்கிறவர்*
*9. நல்லோர் மேல் பிரியமுள்ளவர்*
*10. தெளிந்த புத்தியுள்ளவர்*
*11. நீதிமான்*
*12. பரிசுத்தவான்*
*13. இச்சையடக்கம் உள்ளவர்*

III. போதிப்பதின் வகையில்

*14. உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகின்றவர்*
*15. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லுகிறவர்*
*16. எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ண வல்லவர்*

ஒருவர் "நல்லதொரு வாழ்வை வாழ்வதினால்" மட்டும் இந்தத் தகுதிகளை பெற்றிருக்க முடியாது. போதகர் என்ற வகையில் அவர் "வல்லவராய்"[19] இருக்க வேண்டும். ஒருவர் "புத்தி கூற"[20] வல்லவராய் இருப்பதற்கு அவர், வசனத்தில் திறனும் பலனும் உள்ளவராய் இருக்க வேண்டும் என்பது நிச்சயமாகவே அவசியமானதாக உள்ளது. முன் கூறப் பட்ட தகுதிகள் யாவையும் உண்மையான வசனத்தை ("ஆரோக்கியமான உபதேசத்தை") உறுதியாய்ப் பற்றிக் கொள்பவர்களால் பெற்றிருக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. இன்றைய நாட்களில், எத்தனை மூப்பர்கள் தேவையில் உள்ள ஆத்துமாக்களிடத்தில் - ஒருவருக்கு ஆறுதல் கூறி, இன்னொருவருக்கு புத்திகூறி, இன்னொருவரைக் களிப்பூட்டி, இன்னொரு வரைப் பெலப்படுத்தி, இன்னொருவரை அறிவுறுத்தி - ஊழியம் செய்து மற்றும் இவை எல்லாவற்றினாலும் அவர்களுக்கு முன்பாகத் தேவனுடைய வசனத்தைத் திறந்து காட்டக் கூடியவர்களாய் இருக்க முடியும்? நேர்மறை யான இந்த வேண்டுகோளானது வெறுமனே ஒரு நல்ல வாழ்க்கை என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கேட்கின்றது.

போதித்தலில் மூப்பரின் பணிப்பொறுப்பின் எதிர்மறை அம்சம் வசனம் 9ல் குறிப்பிடப்பட்டுள்ளது: அவர் எதிர்பேசுகிறவர்களால்[21] எதிர் கொள்ளப்படுவார் (மறுத்துரைப்பவர்; KJV). என்ன ஒரு பிடிவாதமான/ மாற்றமுடியாத ஆளுமைத் தன்மை! மூப்பர் என்பவர் "கண்டனம்

*பண்ண''*[22] வல்லவராய் இருக்க வேண்டும். கண்டனம் பண்ணக் கூடிய இந்தத் திறமையானது நல்லதொரு வாழ்வை வாழ்வதினால் மட்டும் மேம்படுத்தப்படக் கூடுமா? அது (நல்லதொரு வாழ்வு) கள்ள போதகரை வெளிப்படுத்தி கடிந்து கொள்ளுமா? இவைகள் சபையின் உண்மையான தேவைகளாய் உள்ளன. கூர்மதி கொண்டவரும், "சத்தியத்தின் வசனத்தை மிகச் சரியாகக் கையாள்பவர்" என்று அறியப்பட்டுள்ளவருமாயிருப்பவர் இந்தப் பணிப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது அவசியமாய் உள்ளது (2 தீமோ. 2:15). தேவனுடைய மக்களின் மத்தியில் ஊழியம் செய்து அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டிய மூப்பர்களுக்கு இந்தத் தகுதிகள் எவ்வளவாய் நடைமுறைக்குரியவையாய் இருக்கின்றன (எபி. 13:17).

*மனிதரின் குடும்பத்தைப் பொறுத்தமட்டில்,* ஒருவர் ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து கொண்டு வாழுதல் பற்றி எவரொருவரும் தவறெதையும் (இது வரையில்) கண்டறிந்ததில்லை.[23] அது போலவே, ஒரு மனிதர் "துன்மார்க்கம்"[24] அல்லது "அடங்காமை"[25] என்பவற்றினால் குற்றம் சாட்டப்படாத பிள்ளைகள் உடையவராய் இருத்தல் பற்றியும் எவரொருவரும் தவறைக் கண்டறிய மாட்டார். ஒரு மனிதர், நல்லதொரு குடும்பத்தைக் கொண்டிருந்து, அவரது பிள்ளைகளுக்கெதிராகக் குற்றச் சாட்டுகள் கொண்டு வரப்பட முடியாதிருக்கும் பொழுது, அது சபையாகிய தேவனுடைய குடும்பத்தைக் கவனிக்கும் திறமையுடன் இருத்தலுக்கான ஒரு பிரதானமான படியாக உள்ளது (1 தீமோ. 3:4, 15).

*மூப்பர் தமது சொந்த/தனிப்பட்ட வாழ்வைப் பொறுத்தமட்டில்* பல தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். இந்தத் தகுதிகளை வாசிக்கின்ற செயல், மூப்பர்கள் செய்ய வேண்டிய வேலையில் அவைகள் (தகுதிகள்) எவ்வாறு பொருந்துகின்றன என்பது பற்றி நமது மனதில் ஆழமான பதிவுகளை ஏற்படுத்துகின்றன. ஒன்று கூடி இணைக்கப் பட்டுள்ள, பின்னப்பட்ட உறவுமுறைகளைக் கொண்டுள்ள, மனித உடலின் உறுப்புக்களைப் போன்ற தன்மை கொண்ட மக்களுடன் மூப்பர்கள் ஈடுபாடு கொண்டுள்ளனர் (1 கொரி. 12:12-27). எதிர்மறைப் பட்டியலில், "தன்னிஷ்டப்படி" செய்யும் ஒரு ஆத்துமா பிறருடைய ஆர்வங்களைக் கவனிப்பதற்குப் பதிலாகத் தனது சுய ஆர்வங்களையே கவனிப்பதாக இருக்கும் (எபி. 13:17; பிலி. 2:19, 20). "முற்கோபம் கொள்ளுகிற" ஒருவர், ஒழுங்கற்று நடக்கின்ற ஆத்துமாக்களுக்குப் புத்தி கூறுகையில் அமைதியாய் நிலைத்திருக்கப் தகுதியற்றவராக இருப்பார் (1 தெச. 5:12-14). மதுபானப் பிரியரோ அல்லது அடிக்கிறவரோ, மந்தைக்கு ஒரு நல்ல மாதிரியாய் (1 பேது. 5:3) இருக்க மாட்டார் என்பது நிச்சயம். மூப்பர்கள் பிராந்திய சபையின் நிதிநிலை சார்ந்த விஷயங்களைக் கையாள வேண்டியவர்களாய் இருப்பதால் (அப். 11:30), மூப்பர் "இழிவான ஆதாயத்தை இச்சிப்பவர்" என்ற நிலையில் இருந்தால் அது எவ்வளவாக ஏற்பில்லாததாயிருக்கும்! (யோவா. 12:4-6ஐக் காணவும்).

*நேர்மறையான தனிப்பட்ட பண்புகள்* ஒரு மூப்பரை அவருக்கு

*ஒப்புவிக்கப்பட்ட பணிப்பொறுப்புகளுக்குத் தயார் செய்ய இதே அளவுக்கு சமமாகப் பொருந்துகின்றன. அந்நியரை உபசரித்தல் என்பது, விலகிச் செல்லும் ஆடுகளிடம் நெருக்கமாயிருக்கும் (லூக். 15:3-7ஐக் காணவும்) ஒரு மேய்ப்பருக்கு ("pastor"; எபே. 4:11; அப். 20:28) இயல்பான விஷயமாய் உள்ளது. அவர் மந்தைக்கு "நற்செய்தியை" ஊட்டி, பிற உறுப்பினர்கள் பின்பற்றிச் செல்ல தர அளவை ஒன்றை அமைக்க வேண்டியிருப்பதால், நிச்சயமாகவே அவர் நல்லோர்மீது பிரியமுள்ளவராய் இருக்க வேண்டும். தெளிந்த புத்தியுள்ளவராயிருத்தல் (சுய அடக்கம் கொண்டிருத்தல்) என்பது எவரொருவரும் "தீமைக்குத் தீமையைச் செய்யாதபடி" பார்த்துக் கொள்ள வேண்டிய மனிதருக்குத் தகுதியுடையதாக இருக்கின்றது (1 தெச. 5:15). சண்டையிடுகிறவர்களைக் (தீத்து 3:10) கையாண்டு ஒழுங்கு படுத்துகிற மனிதர் உறுதித் தன்மையும் நியாயமும் உள்ளடங்குகிற நீதியுள்ளவராக இருத்தல் என்பது நிச்சயமாகவே அவசியமாகிறது. இரவும் பகலும் கண்ணீரோடு சகோதரருக்குப் புத்தி சொல்லுவதற்கான (அப். 20:31, 35) ஆவிக்குரிய ஆழமானது, மூப்பர்கள் "அர்ப்பணிப்பு" உடையவர்களாகவும் சுய கட்டுப்பாட்டுடனும்[26] இருக்க வேண்டியது ஏன் என்பதை விளக்கப்படுத்தும்.*

*மூப்பர்கள் செய்யும்படி தேவன் ஒப்படைத்துள்ள ஊழியத்திற்கு இந்தப் பண்புகள் எவ்வளவாய் ஏற்புடையவைகளாக உள்ளன! பவுல் தொடருகையில், மூப்பர்கள் அவ்வாறு தகுதிப்பட வேண்டியது ஏன் என்பதை இன்னும் காண்பித்தார்.*

## *கண்காணிகளின் தேவை (வ. 10-16)*

*தேவன் ஒருபொழுதும் காரணம் எதுவுமின்றி ஒரு தேவையையும் கொடுத்ததில்லை. பெற்றோர்களின் தேவைகளில் பகுத்தறிவுக்குரிய காரணங்களைப் பிள்ளைகள் காண வேண்டியது அவசியமாய் இருப்பது போலவே, சகோதரர்கள், தங்களின் பிதாவானவர் தமது பிள்ளைகளிடம் நிபந்தனைகளை ஏற்படுத்துவது ஏன் என்பதைக் காண வேண்டியது முக்கியமானதாக உள்ளது. தேவன் கேட்டுக் கொள்கின்றது நியாயமான தாகவே உள்ளது.*

### *நிலையில்லாத உறுப்பினர்கள் தங்களின் சூழ்நிலையினால் ஜெயிக்கப்பட படுவார்கள் (வ. 10-14)*

*மூன்று வகைகளில் (ஏதாவது) ஒன்றில் பலர் பொருந்துவதாகப் பவுல் அறிவித்தார் - மற்றும் அவர்கள் யாவரும் கலகம் விளைவிப்பவர்களாய் இருக்கின்றனர் (1:10, 11).*

*சிலர் "அடங்காதவர்களாய்"[27] இருக்கின்றனர். இவர்கள் தங்கள் நடக்கையைக் கடிவாளமிடும் அல்லது கட்டுப்படுத்தும் எந்தக் கொள்கை களையும் எதிர்க்கின்றனர். இவர்கள் காரணமின்றி கலகம் செய்பவர்களாய்/ அடங்காதவர்களாய் உள்ளனர். அவர் செயல்படுவதற்கு மாறாக, மறு செயல்புரிவார்கள், உறவு படுவதற்கு மாறாக மீறி நடப்பார்கள். அவர்கள்*

சத்தியத்திற்குப் பதில் கலகத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றனர்!

இந்த மக்கள் "வீண் பேச்சுக்காரர்களுடன்"[28] இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஏராளமாகப் பேசுவார்கள், ஆனால் இவர்கள் பயன்மிக்க ஏதொன்றையும் கூறுவதில்லை. அவர்கள் கூறுகின்றவை (இருதயத்தை) புண்படுத்தலாம், ஆனால் அது உதவியாய் இராது. இந்தப் பேச்சாளர்கள் எவ்வளவு நேரத்தை வீணாக்கினார்கள் என்பதையும் நல்லதல்லாத காரணத்திற்கு இவர்கள் எவ்வளவு செவிகளைச் சிறைப்பிடித்தார்கள் என்பதையும் கர்த்தர் மட்டுமே அறிவார்!

அடுத்த குழுவினர் இன்னும் அதிகமான அபாய அளவில் இயங்கு கின்றனர், ஏனெனில் இவர்கள் ''மனதை மயக்குகிறவர்களாய்''[29] இருக்கின்றனர். இது தேவனுடைய மக்கள் ஆரோக்கியமான உபதேசத்தின் மீது கட்டப்பட்ட விசுவாசத்தினால் வாழ்வதற்கு மாறாக மாம்ச இச்சைகளைத் திருப்திப்படுத்துவதற்காக உணர்வுகளால் செயல்படும்படி அவர்களை இயக்குவதற்கு வழிநடத்துகின்ற அருட்கொடை முயற்சிகளை குறிப்பதாகக் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட அபாயகரமான மனம் மயக்குகிறவர்கள் மந்தையின் மத்தியில் உள்ளனர் என்ற உண்மையானது 1:9ல் விவரிக்கப்பட்ட வகையில் தகுதிப்பட்டுள்ள மனிதர்கள் இருக்க வேண்டியதன் அவசியத்தை முக்கியத்துவப்படுத்துகின்றது.

இம்மூன்று குழுவினருமே சேதப்படுத்துகிற மற்றும் அழிக்கின்ற வகையில் ஆத்துமாக்களின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்பது துன்பகரமானதாக உள்ளது. பவுல் விவரித்த கலகம் விளைவிப்பவர்கள், ''முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறவர்களாய்''[30] (1:11) இருந்தனர்; அதாவது, அவர்கள் முழுக்குடும்பங்களின் விசுவாசத்தை அழித்துக் கொண்டிருந்தனர். ஏதாவதொரு ஆத்துமா சபையை விட்டுச் செல்லுகிற பொழுது, அது ஆழ்ந்த வருத்தத்திற்குக் காரணமாக உள்ளது; ஆனால் முழுக்குடும்பங்களுமே புறம்பாக வழிநடத்திச் செல்லப்படும் பொழுது, மீட்புக்கான நம்பிக்கை மிகக் குறைந்த அளவே உள்ளது. இவ்வகையான செயல்பாடுகள் சபையில் நடப்பதையும், அது மூப்பர்கள் அல்லது சகோதரர்களால் கண்டு கொள்ளாது விடப்படுவதையும் தேவன் தடை செய்கின்றார்! "தாங்கள் போதிக்கக் கூடாத விஷயங்களை அவர்கள் போதிப்பதால்," அவர்கள் 1:9ன் ஆரோக்கியமான உபதேசத்தை எதிர்த்து நின்றனர். ஆதாயத்திற்கான ஒரு கூற்றானது பவுலின் பலத்த கண்டனத்தைப் பெறத் தகுதி பெற்றிருந்தது: அவர்கள் "இழிவான ஆதாயத்திற்காக" கள்ள போதனைகளை மேம்படுத்திக் கொண்டிருந்தனர்.

பிறகு பவுல், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கிரேத்தாவில் வாழ்ந்த மதிக்கத்தக்க ஒரு கவிஞரான எப்பிமெனிடெஸ் என்பவரைத் தேர்ந்தெடுத்து, கிரேத்தர்கள் ''பொய்யர், துஷ்ட விலங்குகள், பெரு வயிற்றுச் சோம்பேறிகள்'' (1:12) என்ற வகையில் கெட்ட பெயர் பெற்றவர்கள் என்ற அவரது சாட்சியத்தைத் தேர்ந்தெடுத்தார். "அவர்களில் ஒருவராகிய" தீர்க்கதரிசி என்பவர் அவர்களை விமர்சனம் செய்வதைக் காட்டிலும் புகழ்ந்துரைப்பதே அதிகம் சாத்தியம் உள்ளதாய் இருந்திருக்கும், ஆனால் அவர்களை அவர் கண்டனம் செய்திருந்தார்.

"அவர்களைக் கண்டிப்பாய்க்[31] கடிந்து கொள்"[32] (1:13) என்று பவுல் கட்டளையிட்டார். இந்தப் பணி ஒப்படைப்பை நிறைவேற்ற வசனத்தைப் பற்றிய அறிவும் மாபெரும் தைரியமும் தேவைப்படுகின்றது, ஆனால் இது ஒரு கட்டளையாக/மிக முக்கியமானதாக உள்ளது என்பதை நினைவில் வையுங்கள். மக்களின் ஆத்துமாக்களும் முழு இல்லத்தவர்களும் ஆபத்துக்குள்ளான நிலையில் இருக்கின்றனர். இதே ஆத்துமாக்கள் "விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாகும்படி" மாற்றம் அடையலாம்.

கடிந்து கொள்ளுதலுக்கான தெய்வீக கட்டளையானது, (1) பயத்தில் தூரமாய் நிற்பதால், (2) இது எவ்வளவு மோசமானதாக உள்ளது என்று பேசுவதினால், (3) தவறு செய்பவர்களிடத்தில் பேசுவதற்கு மாறாக *அவர்களைப் பற்றிப்* பேசுவதினால், அல்லது (4) அவர்களிடம் பேசி, ஆனால் அவர்களைப் போலவே அடங்காதவர்களாவதினால் நிறைவடையச் செய்யப்பட முடியாது. பக்குவமற்ற சகோதரர்கள் இவ்வழிகளில் ஒன்று அல்லது அதிகமானவற்றில் பதில்செயல் செய்யலாம். இந்தப் பணி ஒப்படைப்பைக் கையாள்வதற்கு ஆவிக்குரிய வகையில் நீங்கள் தேவையானவற்றை பெற்றிருக்கிறீர்களா?

விவாதம் மற்றும் குழப்பத்தின் உச்சத்தில், "யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவி கொடாமல்" (1:13) அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதே பவுலின் நடைமுறை வேண்டுகோளாய் உள்ளது. உணர்வெழுச்சியான வேளைகள் மற்றும் (அதிகமான பேச்சுக்களை எப்போதும் கொண்டுள்ள) திருத்தும் சூழ்நிலைகள் ஆகியவற்றில், உண்மைகளுடன் கற்பனைக் கதைகள் கலந்து விடுதலைக் கொண்டிருத்தலும், தெய்வீக ஆணைகளை இடமாற்ற மனித தேர்ந்து கொள்ளுதல்களை/சிறப்புரிமைகளை அனுமதிப்பதும் சுலபமானதாக உள்ளது. ஆரோக்கியமான உபதேசத்தில் புத்திகூறுதல் மற்றும் இழிவான ஆதாயத்திற்காக (கள்ள போதனை) உரைப்பவர்களைக் குற்றம் உணர்த்தும் ஆகிய இரண்டையும் செய்யக்கூடிய பக்குவம் வாய்ந்த மனிதர்களை நாம் கொண்டிருக்க வேண்டும்.

## உறுப்பினர்கள் தங்கள் சூழ்நிலைக்கு மேலாக எழும்பி நிற்க முடியும் (வ. 15, 16)

நமக்குள்ளாக நாம் நினைக்கின்ற வகையிலேயே நாம் இருக்கின்றோம் (நீதி. 23:7). நாம் என்னவாக இருக்கிறோம், நாம் யாராக இருக்கிறோம் என்பது உள்ளானதாக - வெளியானதாக அல்ல - உள்ளது, இது நமது செயல்களையும் பதில்களையும் தீர்மானிக்கும். மாசுபடிந்த கிரேத்தாவில் அப்பொழுதும் கூட, "சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்"[33] (1:15) என்று பவுல் எழுத முடிந்தது. சுத்தமான நபர் தடை செய்யப்பட்டவற்றுக்கு முன்பாகத் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ள முடியும், கண்டனம் பண்ண விரைவுபடும் நியாயத்தீர்க்கும் ஆவியைத் தவிர்க்க முடியும், பொல்லாங்கு நிறைந்த சூழலினூடாக மாசற்ற பண்புடன் கடந்து செல்ல முடியும்.

சுத்தமான தன்மை என்பது "அசுத்தமான"[34] நிலையில் இருப்பதை விட (அதிகம்) விரும்பத்தக்கதாக உள்ளது. பிரச்சனையானது இயல்பில் இரட்டையாக உள்ளது. அசுத்தமானவர்கள் சிந்தையிலும் (இனியும் சரியாகச் சிந்திப்பதில்லை), உணர்விலும் (இனியும் அக்கறை கொள்வதில்லை) பாதிக்கப்பட்டுள்ளனர். 1 தீமோத்தேயு 4:1-3 வசனப் பகுதியானது வஞ்சிக்கிற ஆவிகளுக்குச் செவி கொடுத்து, மனச்சாட்சியில் சூடுண்டவர்களைப் பற்றிப் பேசுகிறது.

இது மனித குலத்தின் இயல்பான ஓட்டமாக அல்லது நடக்கையாக இருப்பதில்லை. "சாயம்" என்பதற்கு ஒப்பான ஒரு சொற்றொடரைப் பவுல் பயன்படுத்தியதென்பது, இயல்பான அல்லது சாதாரணமான ஒன்று இயல்புக்கு மாறானதாக மற்றும் அசாதாரணமானதாக மாற்றப்பட்டுள்ளதை விவரிக்கின்றது. அதைக் காட்டிலும் மேன்மையானவர்களாகவே நம்மை தேவன் வடிவமைத்தார். இதை எபிரெயர் 5:11 உடன் இணைவாக்குங்கள், அங்கு அதை எழுதியவர், சிலர் "கேள்வியில் மந்தமுள்ளவர்களாய்" ஆனதாகக் குற்றம் சாட்டினார். மனிதன் அவ்வாறே பிறக்கவில்லை. தேவன் மனிதனைச் செம்மையானவனாகவே படைத்தார். துரதிர்ஷ்டவசமாக, "மனிதன் அநேக உபாய தந்திரங்களைத் தேடிக்கொண்டான்" (பிர. 7:29). மனிதனிடத்தில் தேவனால் வடிவமைக்கப்பட்ட மேன்மையை மீண்டும் கட்டி எழுப்ப உதவுதல் என்பதே தீத்துவுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியமாகவும் சுவிசேஷ ஊழியர் ஒவ்வொருவரின் முன்பாகவும் அமைத்து வைக்கப்பட்ட ஊழியமாகவும் உள்ளது!

தூய்மையானவர்கள் சுத்தமான ஒரு ஓட்டத்தை நாடுவார்கள் என்றிருக்கையில், அசுத்தமானவர்கள் தேவனுக்குப் பற்றுறுதியை உரிமை கோருவார்கள், பிறகு இறுக்கம் அல்லது அழுத்தத்தின் கீழ் அவரை "மறுதலிப்பார்கள்"[35] (1:16). அவர்கள் தேவபக்தியை நடைமுறைப் படுத்துவதாக வாக்களிப்பார்கள், ஆனால் அதை "அறிக்கையிடுதலை"[36] மட்டுமே செய்வார்கள். எத்தனை பேர், "அது சரியானது என்று நான் அறிகிறேன்" என்று கூறி, பின் உடனடியாக வேறு விதமாய்ச் செய்கின்றார்கள்? அவர்கள் மத்தேயு 7:15-23; 23:2, 3ல் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்.

தீத்துவுக்குப் பவுல் எழுதிய நிருபத்தில் தங்க நூலாக இழையோடியிருக்கும் நற்செயல்களுக்கு நேரெதிரான அருவருக்கப்படத்தக்க தன்மையும் கீழ்ப்படியாமையும் கொண்ட மக்கள் "வெறுத்து ஒதுக்கப்படத் தக்கவர்களாய்"[37] இருக்கின்றனர். தேவனுடைய சாயலாக உருவாக்கப்பட்ட ஆத்துமாக்கள் தகுதியற்றவைகளாகும்பொழுது அது எவ்வளவு துன்பகரமானதாக இருக்கிறது!

---

குறிப்புகள்:

[1]அப்போஸ்தலர் (Gk.: *apostolos*) - ஒரு "செய்தியாளர், கட்டளைகளுடன் அனுப்பப்படும் ஒருவர்" (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek English Lexicon of*

*the New Testament*, trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 68). [2]தேவ பக்தி (Gk.: *eusebeia*) - *"பயபக்தி, மரியாதை, வேதாகமத்தில் ஒவ்வொரு இடத்திலும் தேவனை நோக்கிய பக்தியுள்ளது, தேவபக்தியுள்ளது, அப். 3:12; 1 தீமோ. 2:2; 4:7, 8; 6:5 ... 2 தீமோ. 3:5"* (Thayer, 259); *"இருதயத்தின் உடனடி(யாய்ப் பொங்கிவரும்) உணர்வைக் குறிப்பிடுதல் ... மதம், சுவிசேஷத் திட்டம்"* (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 307). [3]நம்பிக்கை (Gk.: *elpis*) - *"நித்திய மீட்பின் மகிழ்வும் நம்பிக்கையும் நிறைந்த எதிர்பார்ப்பு, அப். 23:6 ... நம்பிக்கையின் உறுதிப்பாடும் பலமும், எபிரெயர் 6:11"* (Thayer, 205-6). [4]தெளிவாக்கப்படுதல் (Gk.: *phaneroo*) - *"மறைக்கப்பட்ட அல்லது அறியப்படா திருந்ததை காணும்படி அல்லது அறியும்படி செய்தல் ... இப்பொழுது உண்மை யாக, காணப்படும்படி, உணர்ந்தறியும்படி செய்தல் ... தெளிவாய் உணர்ந்தறியும் படி, முழுமையாய்ப் புரிந்து கொள்ளும்படி இருத்தல்"* (Thayer, 648). [5]கட்டளை (Gk.: *epitage*) - *"உத்தரவு, ஆணை ... 1 தீமோ. 1:1; தீத்து 1:3 ... அதிகாரத்தின் சாத்தியமான ஒவ்வொரு வடிவத்துடனும், தீத்து 2:15"* (Thayer, 244). [6]உத்தம குமாரன் (Gk.: *gnesios*) - *"சட்டப் பூர்வமாய்ப் பிறந்த, போலியல்லாத, உண்மையான, உண்மையுள்ள பிலி. 4:3; 1 தீமோ. 1:2; தீத்து 1:4"* (Thayer, 119). [7]கிருபை (Gk.: *charis*) - *"மகிழ்வு, சந்தோஷம், களிப்பு, இனிமை, வசீகரம், அன்புத் தன்மை ஆகியவற்றை அளிக்கின்ற விஷயம் ... நல்ல சிந்தை, அன்பு செய்யும் இரக்கம், தயவு ... தகுதியற்ற ஒருவர் மீது பொழியப்படும் இரக்கம் ... ஆத்துமாக் களின் மீது தேவன் தமது பரிசுத்த செல்வாக்கைச் செயல்படுத்தி, அவர்களைத் தேவனிடம் திருப்பி, கிறிஸ்தவ விசுவாசத்தில் அறிவில் மற்றும் பாசத்தில் அவர்களைக் காத்து, பெலப்படுத்தி, வளரச் செய்கிற மற்றும் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளை செயல்படுத்தும்படி அவர்களைத் தூண்டுகிற அவரது இரக்கம் நிறைந்த தயவுத் தன்மை"* (Thayer, 665-66). [8]சமாதானம் (Gk.: *eirene*) - *"சலனமற்ற ஒரு நிலை ... தனி நபர்களுக்கிடையில் சமாதானம், அதாவது இணக்கம், இசைவு ... நல்ஒழுங்கு ... பாதுகாப்பு ... வளமை ... கிறிஸ்துவின் மூலமாக மீட்பு உறுதிப்படுத்தப்பட்ட, அதனால் தேவனிடமிருந்து வரும் ஏதொன்றிற்கும் பயப்படாத நிலையிலும், பூமிக்குரிய தனது பங்கு என்ன வகைப்பட்டதாயிருப்பினும் அதில் திருப்தியடைகிற நிலையிலும் இருக்கும் ஒரு ஆத்துமாவின் சலனமற்ற நிலை"* (Thayer, 182). [9]*பொதுவில் நமது பயிற்சித் திட்டங்கள் (கிறிஸ்தவக் கல்லூரிகள், பிரசங்கித் தலுக்கான பள்ளிகள், வேதாகம இருக்கைகள், முதலியன) கிறிஸ்துவின் சரீரத்தில் மூப்பர்களாய் இருப்பதற்கு பக்குவம் வாய்ந்த மனிதர்களுக்கு வரையறைக்குட்பட்ட பாடத் திட்டத்தைக் கொண்டுள்ளன அல்லது அவ்வகைப் பாடத் திட்டங்களே இல்லை. நாம், பிரசங்கியார்களாய், இளைஞர்களுக்கு இயக்குநர்களாய், தனிப்பட்ட ஊழியத்தின் இயக்குநர்களாய், பாடல் (இசை) போதகர்களாய் மற்றும் ஊழியர்களாய் இருக்கும்படி மனிதர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளோம், ஆனால் மூப்பர்களுக்கான பயிற்சியை நாம் வாரக் கடைசிக் கருத்தரங்குகளுடன் குறைத்துக் கொள்ள விழைந்துள்ளோம்! இந்த மனிதர்களுக்குக் கீழ்ப்படியும் படியாகவே கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டுள்ளார், மற்றும் இவர்களே நம்முடைய ஆத்துமாக் களுக்குக் கணக்கொப்புவிப்பார்கள் (எபி. 13:17). கிறிஸ்துவின் உடன்படிக்கை யானது பாடத் திட்டத்தை அளிக்கின்றது (1 பேது. 1:1-5; 1 தெச. 5:12-22; அப். 20:17-38) ஆனால், நாம் அதை பெரும்பாலும் ஊக்கமாய் படித்ததோ அல்லது தக்க வகையில் போதித்ததோ இல்லை. மூப்பர்களற்ற சபைக்குழுமங்கள் இருந்துள்ள நிலை அல்லது ஒருக்காலும் தக்க வகையில் பயிற்சி பெறாத அல்லது தாங்கள் கொண்டிருக்கும்படி கதறுகிற தெளிவான பணி ஒப்படைப்புகளுக்கு ஆவிக்குரிய*

*அஸ்திபாரம் தரப்படாத நிலையில் உள்ள சில மனிதர்கள் மூப்பர்களாய் ஊழியம் செய்தல் என்பதே இந்தப் புறக்கணிப்பிற்கு செலுத்திய விலையாக இருந்துள்ளது.* [10]*காரணம்* (Gk.: *charin*) - *"சாதகமாயிருத்தல், ... சந்தோஷத்திற்காக ... நிமித்தமாக ... 1 தீமோ. 5:14; தீத்து 1:11; யூதா 16 ... இந்தக் காரணத்திற்காக, எபே. 3:1; தீத்து 1:5 ..."* (Thayer, 665).

[11]*குறைவாயிருக்கிறவைகள்* (Gk.: *ta leiponta epidiorthose*) - *இது பால் வேறுபாடற்ற சொல்லாயுள்ளது என்ற உண்மையானது இது ஏதொன்றாகவும் இருக்கலாம் என்பதை அர்த்தப்படுத்துகின்றது. மூலவார்த்தையான leipo என்பது "விட்டு விடுதல் ... பின்னால், கைவிடுதல் ... தண்டனை அளித்தல், தாழ்ந்திருத்தல், என்று அர்த்தப்படுகிறது, யாக். 1:4 ... கைவிடப்பட்டிருத்தல் ... யாக். 1:5; 2:15 ... குறைவு பட்டு அல்லது இல்லாது இருத்தல், தவறுதல் ... தீத்து 3:12 ... 1:5"* (Thayer, 375). [12]*நிறைவாக்குதல்* (Gk.: *epidiorthose*) - *"சரிப்படுத்துதல் அல்லது (ஏற்கனவே திருத்தி வைக்கப்பட்டுள்ளதுடன்) கூடுதலாகத் திருத்துதல் ... எஞ்சியுள்ளவை, தீத்து 1:5"* (Walter Bauer, *A Greek - Englsih Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d. ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 292). [13]*நியமித்தல் செய்யப்படுவதற்கு முன்பு, குறைவாயிருப்பவற்றை விசேஷமாக சரீரத்தின் இணக்கத்தின் வகையில் அவ்வாறுள்ளவற்றை நிறைவாக்குவதற்கு ஞானத்தைக் கவனித்தல் நல்லதாயுள்ளது. அது செய்யப்படவில்லையென்றால், சபைக்குழுமத்திற்குள்ளாக ஏதேனும் பிரிவினை அல்லது ஒழுங்கின்மை இருந்தால் அதற்கு ஒரு நிரந்தரமான நிலைப்பாடு கொடுக்கப்பட்டு விடலாம்.* [14]*நியமித்தல்* (Gk.: *katastema*) - *"பதவியில், ... நிபந்தனையில், பண்பில், நடக்கையில் இடுதல்; தீத்து 2:3"* (Robinson, 389). [15]*மூப்பர்களாயிருப்பதற்கென்று மனிதர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் நியமித்தல் பற்றிய ஒரு கலந்துரையாடலானது, டெய்ட்டன் கீஸீ அவர்கள் எழுதிய A Re-Evaluation of the Eldership* (Abilene, Tex.: Quality Publications, 1967), 40-47 *என்ற புத்தகத்தில் காணப்படுகிறது.* [16]*இயக்குதல்/ஆணையிடுதல்* (Gk.: *diatasso*) - *"முற்றிலுமாக ஏற்பாடு செய்தல், முறைப்படியாக செய்து முடித்தல் ... முழுமையும் ஒழுங்கமைத்தல் ... நியமித்தல் ... திருநிலைப்படுத்துதல், கட்டளையிடுதல்"* (Robinson, 176); *"... குறிப்பிடுதல், கட்டளை கொடுத்தல் ... மத். 11:1; 1 கொரி. 16:1 ... தீத்து 1:5"* (Thayer, 142). [17]*1 தீமோ. 3:1-8 & தீத்து 1:6-9ன் மீதான அட்டவணையில் இந்தத் தகுதிகளை பரிசீலிக்கவும்.* [18]*குற்றம் சாட்டப்படாமை* (Gk.: *anegkletos*) - *"... கணக்கு ஒப்புவிக்க அழைக்கப்பட முடியாமை, கடிந்து கொள்ளப்படாமை, குற்றம் சாட்டப்படாமை, குற்றமற்ற தன்மை ... 1 தீமோ. 3:10; தீத்து 1:6"* (Thayer, 44). [19]*வல்லமை* (Gk.: *dunamai*) - *"வல்லமை கொண்டிருத்தல் ... சிலவற்றைச் செய்யக் கூடியவராயிருத்தல் ... மாற். 9:22; லூக். 12:26; 2 கொரி. 13:8 ... செய்யத் திறமை, பலம், வல்லமை நிறைந்த; 1 கொரி. 3:2; 10:13"* (Thayer, 158-59). [20]*புத்திகூறுதல்* (Gk.: *parakaleo*) - *"ஒருவரின் பக்கத்திற்கு அழைத்தல் ... உரையாற்றுதல், பேசுதல் ... உடன்பாடு செய்தல், ஆறுதல் அளித்தல், புத்திகூறுதல் ... தேற்றுதல், ஆறுதலினால் உற்சாக மூட்டி பெலப்படுத்துதல் ... புத்துணர் வூட்டுதல், களிப்பாக்குதல் ... அறிவுறுத்தல், போதித்தல்"* (Thayer, 482-83).

[21]*எதிர் பேசுதல்* (Gk.: *antilego*) - *"எதிராகப் பேசுதல், ஆதாயத்திற்காகப் பேசுதல், எதிர்பேசுதல் ... ஒருவர் தமக்கெதிராயிருத்தல், அவருக்குக் கீழ்ப்படிய உடன்படாமை, ... அவருடன் ஏதொன்றையும் செய்ய மறுத்தல்"* (Thayer, 50). [22]*கண்டம் செய்தல்* (Gk.: *elegcho*) - *"குற்றம் உணர்த்துதல், கண்டனம் செய்தல், தவறைச் சுட்டிக்காட்டி வலியுறுத்தல் ... குற்றம், தவறு அல்லது தவறுதல் பற்றியது, பாவம் பற்றியது, 1 கொரி. 14:24 ... யாக். 2:9 ... குற்றம் உணர்த்துதலினால் வெளிப்*

படுத்துதல், வெளிச்சத்திற்குக் கொண்டு வருதல் ... யோவா. 3:20, இ.வ. 21; எபே. 5:11, 13 ... கிறிஸ்தவத்தின் கள்ள போதகர்களை வெளிப்படுத்துதல் மற்றும் தவறைச் சுட்டிக் காண்பித்த வலியுறுத்துதல் தொடர்பாகப் பயன்பட்டது, தீத்து 1:9, 13 ... திருத்துதல்; ... வார்த்தையினால் கடுமையாகக் கண்டித்தல், சிட்சித்தல், புத்தி கூறுதல், கண்டம் செய்தல்; யூதா 22 ... ஒருவரின் தவறை அவருக்குக் காண்பித்தல் ... சிட்சித்தல், தண்டித்தல் வெளி. 3:19" (Thayer, 202-3). [23]மதப் பிரசங்க வட்டாரங்களில் மிகப் புகழ் பெற்ற சபையொன்று தனது "துறவிகளுக்கு" (மூப்பர்கள் உள்ளடங்க - எபி. 13:4ஐக் கவனிக்கவும்) திருமணம் செய்து கொள்வதைத் தடை செய்கிறது என்பது முரண்பாடானதாக உள்ளது, இது கர்த்தருடைய சபையில் மூப்பர்களாக ஊழியம் செய்கிறவர்களிடம் (இருக்கும்படி) பவுல் கேட்டுக் கொண்டதற்கு நேரெதிரான நிலையாக உள்ளது. ஒருவர் தமது வீட்டு/குடும்ப வாழ்வின் மூலம்தான் தேவனுடைய குடும்பத்தைத் தன்னால் கவனிக்க முடியும் என்பதை நிரூபிக்கின்றார். உண்மையில், பிசாசானவன் இன்னொரு சபையைத் தொடங்குகிற பொழுது, அதை அவன் உபதேசத்தை மாற்றுவதன் மூலமே செய்கிறான் (ரோமர் 16:17, 18; 1 யோவா. 4:1; அப். 17:11; 20:28-29). [24]துன்மார்க்கம் (Gk.: *asotia*) - "கைவிடப்பட்ட மனிதரின் பண்பு, இரட்சிக்கப் பட முடியாதவர் ... திருத்தப்பட முடியாத தன்மை ..." (Thayer, 82). [25]அடங்காமை (Gk.: *anupotaktos*) - "கட்டுப்பாட்டின கீழ் கொண்டு வரப்பட முடியாதவர், கீழ்ப்படியாதவர், அடங்காதவர், எதற்கும் வளைந்து கொடுக்காதவர்; 1 தீமோ. 1:9; தீத்து 1:6, 10" (Thayer, 52). [26]சுயகட்டுப்பாடு (Gk.: *egkrates*) - "பலமாய் இருத்தல் ... (ஒன்றின்) மீது வல்லமை கொண்டிருத்தல், அடிமைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், கடிவாளமிடுதல், கட்டுப்பாட்டுடனிருத்தல்/விலகியிருத்தல்" (Thayer, 167). [27]அடங்காமை (Gk.: *anupotaktos*) - "கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படுத்த முடியாதவை, கீழ்ப்படியாதவை பற்றிய விவரிப்பு ... 1 தீமோ. 1:9; தீத்து 1:6, 10 ... குழப்பமுற்ற" (Thayer, 52). [28]வீண் பேச்சுக்காரர் (Gk.: *psataiologia*) - "வெறுமையான, பலனற்ற பேச்சில் ஈடுபட்டுள்ளவர் ... கனியற்ற கலந்துரையாடலுக்குத் திரும்புபவர், 1 தீமோ. 1:6" (Arndt and Gingrich, 496); "... வீணாகக் கடுங்குரல் எழுப்புதல்" (Robinson, 446). [29]மனத்தை மயக்குகிறவர்/வஞ்சகர் (Gk.: *phrenapates*) - "மனதை வஞ்சிக்கிறவர் ... கெடுத்து வீழ்த்துபவர் ... தீத்து 1:10" (Thayer, 657-58). *Phrenapatao* என்ற வினை வடிவத்தின் மீது கலாத்தியர் 6:3ஐ பட்டியலிட்ட தாயெர் அவர்கள், "*apatan* என்பதில் உள்ளதைக் காட்டிலும் இந்த வார்த்தையினால் அதிகம் கருத்து மறைவாய் உணர்த்தப்படுகிறது, ஏனெனில் இது கீழ்ப்படுத்துகிற வினோதங்கள் என்ற கருத்தைக் கொண்டு வருகிறது" என்றும் கூடக் கூறினார். [30]கவிழ்த்துப் போடுதல் (Gk.: *anatrepo*) - "கவிழ்த்துப்போடுதல், அழித்தல், ஒழுக்க ரீதியாக நாசம் விளைவித்தல் தீத்து 1:11" (Thayer, 48).

[31]கண்டிப்பு (Gk.: *apotomos*) - "... வெட்டுதல் (போன்ற கூற்றுடன்), முற்றிலும் ... முழுமையும் ... தீர்மானமாக, கடுமையாக, 2 கொரி. 13:10; தீத்து 1:13" (Robinson, 89). [32]கடிந்து கொள்ளுதல் (Gk.: *elegche*) - கட்டளைச் சொல்லானது இது ஒரு சுவிசேஷ ஊழியர் செய்ய வேண்டிய அவசியமான செயலாக உள்ளது என்று அர்த்தப்படுத்துகிறது. அவர்களைத் திருத்துதல் அல்லது கண்டனம் பண்ணுதல் (இது 1:9ல் "கண்டனம்" என்பதற்குள்ள வார்த்தையாக உள்ளது) என்பது மேற் கொள்ளப்பட வேண்டிய செயலாக உள்ளது. [33]சுத்தம் (Gk.: *katharos*) - "சுத்தமாயிருத்தல் ... உடல் ரீதியில் ... அழுக்கின்றியிருத்தல் ... சட்டப்பூர்வமானது, தடை செய்யப்படாதது ... குற்றமற்றது, ஒன்றும் அறியாதது ... உண்மையானது, நேர்மையானது, தீமையை விலக்குவது ..." (Robinson, 362). [34]அசுத்தம் (Gk.: *memiantai*) - "இன்னொரு நிறத்தினால் சாயமேற்றுதல், கறைப்படுத்துதல் ... அசுத்தமாக்குதல், மாசாக்குதல், தூய்மைக் கேடு செய்தல் ... உடல்ரீதியான மற்றும்

*ஒழுக்க ரீதியான கருத்தில் ... சிற்றின்ப விருப்பம் பற்றியது, யூதா 8 ... தீத்து 1:15 ...”* (Thayer, 414). [35]*மறுதலித்தல்* (Gk.: *arneomai*) - *“ஒருவர் தாம் எவ்வாறு இருப்பதாக உரிமைகோருகிறாரோ, அதை மறுத்தலித்தல்; 1 யோவா. 2:22 ... உரிமையை விடுதல், புறக்கணித்தல், ஒப்புக் கொள்ளாமை, ... ஒருவர் தம் சொந்த பண்பு மற்றும் அறிவித்தலுக்கு உண்மையற்றிருத்தல், ஒருவர் தம்முடனேயே சீரற்ற வகையில் இருத்தல் ... உரிமையை விடுதல், கைவிடுதல்”* (Robinson, 95). [36]*அறிக்கையிடுதல்* (Gk.: *omologeo*) - *“இன்னொன்றைப் போல் அதே விஷயத்தைக் கூறுதல், ... ஒப்புக் கொள்ளுதல் ... வாக்களித்தல் ... அறிக்கையிடுதல், அறிவித்தல் ... ஒருவரின் உறுதிப்பாட்டிற்கு இணங்குதல் அல்லது மாறுதல் என்பதை மறைமுகமாய்க் குறிப்பிடுகிறது”* (Thayer, 446). [37]*வெறுத்து ஒதுக்கப்படத் தக்க* (Gk.: *adokimos*) - *“புறக்கணிக்கப்பட்டவர் ... கண்டனத்திற்குத் தகுதியானவர், ... எனவே தகுதியற்ற, மதிப்பற்ற நபர்கள் பற்றியது, தீத்து 1:16 ... வீண்”* (Robinson, 14).